ॐ श्री गुरुभ्यो नमः
ஓம் ஸ்ரீ குருப்யோ நம:

# இந்திய வரலாற்றின் கதை

## 1 - அறிமுகம்

ஜெயக்குமார் S அம்மங்குடி


jayakum108@gmail.com

[*ஆங்கிலத்திருந்து தமிழாக்கம் செய்தது* - N.*ராமச்சந்திரன்*]

**சுருக்கம்**: இந்திய வரலாற்றை எழுதியவர்கள் நம்முடைய நாட்டின் மகத்தான சாதனைகளையும், காலனி ஆதிக்கத்தால் விளைந்த கொடுமைகளையும் பற்றி குறைத்து எழுதினார்கள் அல்லது முழுவதும் மறைத்துவிட்டார்கள். இதற்குக் காரணம் எழுதியவர்கள் எல்லோரும் இந்தியாவை காலனி நாடாக்கிக் கொள்ளையடித்தவர்கள்தான். இங்கேயே வாழ்ந்து, விவாதித்து, வளர்ந்து மற்றும் நம்முடைய நாகரீகத்தில் அழியாத சுவடுகளை பதித்த மாமனிதர்கள் அவற்றை எழுதவில்லை.

எப்போதுமே "வரலாறு" என்பது ஒரு போரடிக்கும் பாடம் என்று சொல்வார்கள். நான் பள்ளியில் படிக்கும்போது, எனக்கு அந்தப் பாடத்தில் ஆர்வம் இருந்தாலும், பாடம் நடத்திய முறை எனக்கு ஊக்கமளிப்பதாக இல்லை. தேர்வில் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்திற்காக புத்தகத்தை "மனப்பாடம்" செய்வேன். நம்முடைய பழமையை நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை எனக்கு யாரும் சொல்லித் தரவில்லை. எப்படி யிருந்தாலும், வரலாற்றையும் தத்துவத்தையும் யாரவது அவர்களது வேலைக்காக படிப்பார்களா? நல்ல சம்பளம் வரக்கூடிய மருத்துவம் மற்றும் பொறியியல் ஆகியவற்றைத்தான் படிக்க வேண்டும், சரியா? உங்களில் பலருக்கு இந்த அனுபவம் இருந்திருக்கும் என்பது நிச்சயம்.

நாம் ஒரு "நவீன", "படித்த" இந்தியனை, சில இந்திய விஞ்ஞானிகளின் பெயரை சொல்லச் சொன்னால் உடனடியாக அவர்கள் என்ன சொல்வார்கள்? சி.வி.ராமன்? ராமானுஜன்? ஆர்யபட்டா? அவ்வளவுதான். ஆனால் வெளிநாட்டு விஞ்ஞானிகளின் பெயர்கள்? பௌதீகம் மற்றும் வேதியியல் ஆகியவற்றில் - பாய்ல், சார்லஸ், அவாகாட்ரோ, பிளாங்க், ஷ்ரோடிங்கர், ஐன்ஸ்டைன்: கணிதத்தில் ஃபோரியர், பிதாகோரஸ், நியூடன், காஸ், ஃபிபோனாக்கி: வானியலில் கெப்ளர், கலிலியோ, கோபர்னிகஸ்: தத்துவத்தில் சாக்ரடீஸ், பிளேட்டோ, டெஸ்கார்டே, ஹியூம், ஸ்பினோஸா: இலக்கியத்தில் - கீட்ஸ், ஷேக்ஸ்பியர், வேர்ட்ஸ்வொர்த். "உலக கணித மேதைகள்" என்று நான் கூகிளில் தேடினேன். அப்போது எனக்கு பலரின் புகைப்படங்கள் தெரிந்தன. அதில் முதல் இருபதில், இரண்டே இந்தியர்கள்தான் இருந்தனர்.




இவ்வுலகின் மிகப்பெரிய “தத்துவ மேதைகளில்” ஒருவர் நம்முடை ஆதி சங்கரர் என்று நமக்குத் தெரியும். ஆனால் ஏன் அவருடைய பெயரை நமது பாடப்புத்தகங்களில் காண முடியவில்லை? இந்தியாவைப் பற்றி நன்றாகத் தெரிந்த வில் டியூரன்ட் என்பவர்கூட, தனது ”தத்துவத்தின் வரலாறு” என்னும் புத்தகத்தில் ஆதி சங்கரர் மற்றும் இதர இந்திய மகான்களைப் பற்றி எழுதவில்லை!.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே உபநிஷதங்களில் நம்முடைய ரிஷிகள் நிறைய தத்துவ உண்மைகளை கூறியிருக்கிறார்கள். ஆனாலும் நம்முடைய வரலாறு புத்தகங்கள் கிமு 500 ஆண்டுகளில் வாழ்ந்த பிதாகோரஸ் மற்றும் ஸாக்ரடீஸ் ஆகியோரை பற்றி மட்டும் புத்தகங்கள் பேசுகின்றன. ஒரு ஜெர்மானியர்தான் 1746-ஆம் வருடம் துத்தநாகத்தைக் கண்டுபிடித்தார் என்று நம்முடைய பாடபுத்தகங்கள் கூறுகின்றன. ஆனால் இந்தியாவில் கிமு 1200-ஆம் ஆண்டிலேயே துத்தநாகத்தைத் தயாரித்தோம். இராமாயணத்தை முதல் கவிதை என்று சொல்கிறோம். மேலும் வால்மீகியை முதல் கவிஞர் (ஆதிகவி) என்று சொல்கிறோம். ஆனால் நம்முடைய பாடபுத்தகங்களில் இத்தகைய அற்புதமான விஷயங்களைப் பற்று கூறுவதில்லையே? இந்தியாவின் மிகப்பெரிய கவிஞர்களில் ஒருவரான காளிதாஸ் பற்றி பாடப்புத்தகங்கள் ஒன்றுமே கூறுவதில்லையே?

இந்தியாவில் மேதைகள் மிகக் குறைவாக இருந்தார்களா? அல்லது இந்திய வரலாற்றை எழுதும்போது இவையெல்லாம் மிகப் பெரிய அளவில் மூடி மறைக்கப்பட்டதா? உண்மையான வரலாறு பற்றி தெரிந்து என்ன பிரயோசனம்? இந்தியாவில் வரலாறு பற்றிய கல்வி அமெரிக்கா போன்ற மற்ற நாடுகளிலிருந்து எவ்வாறு மாறுபடுகிறது? நம்முடைய பாடப் புத்தகங்களை திருத்தியமைக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டாமா? அவ்வாறெனில், என்ன நடவடிக்கைகள்?

வரலாறு என்பது “ஆய்வு, விசாரணையின் மூலம் வரும் அறிவு”. வரலாற்றைத் தெரிந்துகொள்ள இருக்கும் ஆதாரங்கள் - அகழாய்வு, கல்வெட்டுக்கள், கையெழுத்துப் பிரதிகள், மொழி ஆய்வுகள் மற்றும் வரலாற்று பாட புத்தகங்கள். பொதுவாக வரலாற்றை பற்றி படிப்பது, வாழ்வியல் அல்லது சமூகவியல் ஆகியவற்றில் அடங்கும். இந்த வழிகளின் வழியே நம் வரலாற்றைப் பார்க்கிறோம். அங்கே, சமூகவியல், உளவியல், மொழியியல், பூகோளம், பொருளாதாரம் மற்றும் மனித இன இயல் ஆகியவற்றின் பாதிப்பைப் பார்க்கிறோம்.

துரதிர்ஷ்டவசமாக, நம்முடைய பாடபுத்தகங்களிலும் பிரபலமான ஊடகங்களிலும் நம்முடைய வரலாற்றைப்பற்றித் தவறான கருத்துக்களை சொல்வதில், பல்வேறு வித்தியாசமான சித்தாந்தங்களின் பரவலான பாதிப்பைப் பார்க்கிறோம். இந்திய வரலாறு விழிப்புணர்வு மற்றும் ஆராய்ச்சி என்னும் அமைப்பில் நானும் எனது சகாக்களும் பள்ளி வரலாறு பாடபுத்தகங்களை மறுஆய்வு செய்தபோது, ஐரோப்பிய, கம்யூனிச, யூத-கிறிஸ்துவ, இஸ்லாமிய மற்றும் தற்காலத்திய சித்தாந்தங்களின் மிக அழுத்தமான பாதிப்புகளைப் பார்த்தோம். இப்படிப்பட்ட பலம் வாய்ந்த

அமைப்புகளை திருப்திப் படுத்த வேண்டும் என்னும் ஆர்வத்தில் பாடப்புத்தக எழுத்தாளர்கள் இருந்ததால், இந்திய வரலாறின் உண்மை வெகுவாக மாற்றப்பட்டுள்ளது.

வெறும் வாழ்வியல் மற்றும் சமூகவியல் எல்லைகளைத்தாண்டி, அறிவியல் அனுபவ அணுகுமுறையையும் உள்ளடக்கி, வரலாற்றின் எல்லைகளை விரிவுபடுத்த நாங்கள் விழைகிறோம். இப்போது கற்றுக் கொடுக்கப்படும் இந்த சிக்கலான கதைகளைத் தாண்டிச் செல்ல உதவும் வகையில் எங்கள் ஆராய்ச்சி பல மறுக்க முடியாத உண்மைகளை வெளிக் கொணர்கிறது. பல தொடர் கட்டுரைகள் மூலம் இந்திய மக்களின் மகத்தான பழமையையும் ஆயிரக்கணக்கான வருடங்கள் அவர்கள் சேகரித்து இந்த உலகுக்கு கற்றுக்கொடுத்த அறிவையும் பற்றி எழுதப்போகிறோம். இதன்மூலம் மறைத்து வைக்கப்பட்ட இந்திய மக்களின் உண்மையான வரலாறை வெளி உலகுக்கு தெரிவிக்கப் போகிறோம்.

**ஜெயக்குமார் S. அம்மங்குடி, Ph.D.**
*jayakum108@gmail.com*

டாக்டர் ஜெயக்குமார் S. அம்மங்குடி, அர்ஷ வித்யா சத்சங்கம் என்னும் அமைப்பை நிறுவியவர். இந்திய வரலாற்று விழிப்புணர்வு மற்றும் ஆராய்ச்சி என்னும் அமைப்பை நிறுவியவர்களில் ஒருவர். இந்த இரண்டு அமைப்புகளுமே அமெரிக்காவில் ஹூஸ்டன் நகரில் உள்ளன. இந்தியர்கள் தங்களுடையது என்று பெருமையுடன் சொல்லிக்கொள்ளக் கூடிய, இந்தியாவின் சமீபத்திய மற்றும் மிகப்பழமையான, மறைக்கப்பட்ட மற்றும் மாற்றுக் கருத்துக்களை சிறப்பித்துச் சொல்ல, சனாதன தர்மத்தில் வாழும் மக்களுக்கு ஒரு தளத்தை அமைத்துக்கொடுத்து, அதன் மூலம் கலாசார அடையாளத்தை ஏற்படுத்துவதே, இந்திய வரலாற்று விழிப்புணர்வு மற்றும் ஆராய்ச்சி (IHAR) என்னும் அமைப்பின் நோக்கம். டாக்டர் ஜெயகுமார் இப்போது வேதாந்தம், சமஸ்கிருதம் மற்றும் இந்து கலாசாரம் பற்றி குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் பெரியவர்களுக்கு வகுப்புகள் நடத்துகிறார். இரசாயன தொழில்துறையில் அவருக்கு 25 வருடங்களுக்கு மேலான அனுபவம் இருக்கிறது.